-749

மாவட்டஆட்சியர் அலுவலகம்,
கோயம்புத்தூர் மாவட்ட கனிம
அறக்கட்டளை, புவியியல் மற்றும்
சுரங்கத்துறை அலுவலகம்,
கோயம்புத்தூர்.

ந.க.471/கனிமம் /2016 நாள் : .02.2019.

**கோயம்புத்தூர் மாவட்ட கனிம அறக்கட்டளையின் நிர்வாக குழு மற்றும் மேலாண்மை குழு கூட்ட நடவடிக்கைகள்.**

கோயம்புத்தூர் மாவட்ட கனிம அறக்கட்டளையின் நான்காவது நிர்வாக குழு மற்றும் மேலாண்மை குழு கூட்டம் 15 .02.2019 பிற்பகல் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் / தலைவர்(பொ), கோயம்புத்தூர் மாவட்ட கனிம அறக்கட்டளையின் மேலாண்மைக் குழு மற்றும் நிர்வாகக் குழு தலைவர், அவர்களின் தலைமையில் நடத்தப்பட்டது. மேற்படி கூட்டத்தில் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

| வ. எண் | நிர்வாக குழு | வ. எண் | மேலாண்மை குழு |
|---|---|---|---|
| 1. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கோயம்புத்தூர். | 1. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கோயம்புத்தூர். |
| 2. | இணை இயக்குநர் / உதவி இயக்குநர் (பொ) (கனிமம்), கோயம்புத்தூர் - கூட்டுநர். | 2. | இணை இயக்குநர் / உதவி இயக்குநர் (பொ) (கனிமம்), கோயம்புத்தூர் - கூட்டுநர். |
| 3. | துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், கோயம்புத்தூர். | 3. | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், ஊராட்சிகள் வளர்ச்சி, (PAPD), கோயம்புத்தூர் |
| 4. | முதன்மை கல்வி அலுவலர், கோயம்புத்தூர். | 4. | உதவி இயக்குநர் - ஊராக வளர்ச்சி துறை, கோயம்புத்தூர். |
| 5. | மாவட்ட கருவூல அலுவலர், கோயம்புத்தூர் | 5. | மாவட்ட ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், கோயம்புத்தூர். |
| 6. | மாவட்ட சமூக நல அலுவலர், கோயம்புத்தூர் | 6. | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு |
| 7. | உதவி இயக்குநர், (ஊராட்சிகள்), கோயம்புத்தூர் | 7. | மாவட்ட சுற்றுச்சூழல் செயற்பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், கோயம்புத்தூர் வடக்கு |
| 8. | திரு எஸ்.நரசிம்ஹன், ஓய்வு பெற்ற துணை ஆட்சியர், எண்.6, ருக்கம்மாள் காலனி, துடியலூர், கோயம்புத்தூர். | 8. | மாவட்ட வன அலுவலர், கோயம்புத்தூர். |
| | | 9. | மண்டல செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை, திருச்சி. |

| | | | |
|---|---|---|---|
| | | 10. | உதவி இயக்குநர், நில அளவை பதிவேடுகள் துறை, கோயம்புத்தூர். |
| | | 11. | மாவட்ட கருவூல அலுவலர், கோயம்புத்தூர். |
| | | 12. | மாவட்ட சமூக நல அலுவலர் கோயம்புத்தூர் |
| | | 13. | துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், கோயம்புத்தூர். |
| | | 14. | இணை இயக்குநர், வேளாண்மை |
| | | 15. | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர், கோயம்புத்தூர். |

<u>கூட்டத்தில் கீழ்க்கண்ட விவரங்கள் விவாதித்து முடிவுகள் செய்யப்பட்டன:</u>

1) கோயம்புத்தூர் மாவட்டத்தில் இயங்கி வரும் சிறு மற்றும் பெருங்கனிம குவாரிகளினால் கனிம அறக்கட்டளைக்காக பெறப்பட்ட கனிம அறக்கட்டளை தொகை 31.01.2019 ம் தேதி வரை ரூ. 12,41,24,515./-(ரூபாய் பனிரெண்டு கோடியே நாற்பத்தி ஒரு இலட்சத்து இருபத்தி நான்காயிரத்தி ஐநூற்றி பதினைந்து மட்டும்) ஆகும்.

2) குவாரி குத்தகை உரிமைதாரர்களிடமிருந்து பெறப்படும் மேற்படி தொகையை சம்பந்தப்பட்ட குவாரிகளால் பாதிக்கப்பட்ட வருவாய் கிராமங்களின் வளர்ச்சி மற்றும் அப்பகுதி மக்களின் மேம்பாட்டு திட்டத்திற்கு பயன்படுத்தப்பட வேண்டும் என கனிம அறக்கட்டளை அரசாணை (எம்.எஸ்) எண்.57, தொழிற்துறை (எம்.எம்.டி.1), நாள்:19.5.2017-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) கோயம்புத்தூர் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியின் மூலம் பெறப்பட்ட தொகையிலிருந்து ரூ.39,66,000 (ரூபாய் முப்பத்தி ஒன்பது இலட்சத்து ஆறுபத்தி ஆறாயிரம் மட்டும்) மதிப்பில் குடிநீர் பயன்பாட்டிற்க்காக 9 திட்டங்களும், ரூ.10,00,000 (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மதிப்பில் சாலை பணிக்காக ஒரு திட்டமும் கோயம்புத்தூர் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டயின் முதல் மற்றும் இரண்டாம் நிர்வாக குழு மற்றும் மேலாண்மை குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டு ஐந்து திட்டங்கள் முழுமையாக செயல்படுத்தப்பட்டும், ஐந்து திட்டங்கள் செயல்பாட்டிலும் உள்ளது.

4) கனிம அறக்கட்டளையின் மூலம் பெறப்பட்ட நிதியின் வரவு செலவின் சுருக்கம்

| விவரம் | தோகை (ரூ.) |
|---|---|
| ஜனவரி 2019 வரை குத்தகைதாரர்களிடமிருந்து பெறப்பட்ட அறக்கட்டளை நிதி | 12,41,24,515 |
| ஜனவரி 2019 வரையிலான செலவினங்கள் | 12,01,510 |
| **நிகரம்** | **12,29,23,005** |
| **எதிர்பார்க்கப்பட்ட செலவினங்கள் (பிப்ரவரி முதல் மார்ச் 2019)** | |
| கணிணி தரவுப் பதிவர் - ஜனவரி 2019 முதல் பிப்ரவரி 2019 வரை 2 மாதங்களுக்கு மாதாந்திர ஊதியம் | 20000 |
| கணக்கர் - ஜனவரி 2019 முதல் பிப்ரவரி 2019 வரை 2 மாதங்களுக்கு மாதாந்திர ஊதியம் | 24000 |
| இரண்டாம் நிர்வாக குழு மற்றும் மேலாண்மை குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட 8 திட்டங்களுக்கான தொகை | 39,76,000 |
| மொத்தம் | 40,20,000 |
| நிகரம் | 11,89,03,005 |

5) புதிய திட்டங்கள் தொடர்பான தீர்மானங்கள்

தமிழ்நாடு மாவட்ட கனிம அறக்கட்டளை விதிகள், 2017 ன் விதி 16 ன் உள்விதி (4), (5) மற்றும் (6) ன் படி ஒரு நிதி ஆண்டில் திட்ட மதிப்பீடு ரூ. 50 இலட்சம் வரை மாவட்ட ஆட்சியரின் தலைமையிலான மேலாண்மை குழுவினால் ஒப்புதல் பெற்று செயல்படுத்தலாம் என்றும் ரூ. 50 இலட்சத்திற்கு மேல் ஒரு கோடி ரூபாய் வரையிலான திட்ட மதிப்பீடுகள் மேலாண்மை குழுவினால் ஒப்புதல் செய்த பின் இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, சென்னை அவர்களின் இசைவு பெற்ற பின் செயல்படுத்த வேண்டும் என்றும் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் உள்ள திட்ட மதிப்பீடுகள் மேலாண்மை குழுவினால் ஒப்புதல் செய்த பின் அரசின் இசைவு பெற்ற பின் செயல்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்துறையிடமிருந்தும், பொதுப்பணித்துறை நீர் வள ஆதார அமைப்பு, பவாணிசாகர் வடிநில கோட்டத் துறையிடமிருந்து கீழ் கண்ட திட்டங்கள் பெறப்பட்டு 07.01.2019 அன்று நடைபெற்ற கோயம்புத்தூர் மாவட்ட கனிம அறக்கட்டளையின் மூன்றாம் கூட்டத்தில் நிர்வாக குழு, மற்றும் மேலாண்மை குழுவினால் ஒப்புதல் செய்யப்பட்டு இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, சென்னை அவர்களின் மூலம் அரசின் இசைவு பெற அனுப்பப்பட்டது.

| Implementing Agency: Tamil Nadu Water Supply and Drainage Board, Maintenance Division (Siruvani), Coimbatore. | | |
|---|---|---|
| **Sl.No** | **Name of the Project** | **Amount (in Lakhs)** |
| 1 | Improvements to CWSS to Kurichi, Kuniyamuthur Municipalities, and Kinathukadavu Town Panchayat in Coimbatore District with Construction of Intake well cum pumphouse, Raw water pumpsets, Raw water pumping main etc. from the U/S of Ambarampalayam | 800.00 |
| **Total** | | **800.00** |

| Implementing Agency: Public Works Department, WRO, Bhavanisagar Dam Division, Bhavanisagar Irrigation Sub Division, Coimbatore. | | |
|---|---|---|
| **Sl.No** | **Name of the Project** | **Amount (in Lakhs)** |
| 1 | Construction of Check dam across Kumittipathi River in S.F.No.696, Pitchanur Village, in Madukarai Taluk in Coimbatore District. The length of the proposed checkdam is 16.00 m and height is 2.10 m by implementing this scheme 132 acres will be benefited through 46 number of open wells | 75.00 |
| 2 | Rehabilitation of Check Dam across Kumittipathi River in Vazhukal Village in Madukkarai Taluk in Coimbatore District. The length of the proposed checkdam is 32.00 m and height is 1.50 m | 125.00 |
| 3 | Construction of Check dam across Manjupallam Near ACC Cement Factory Bridge in Madukkarai Market in Madukkarai Taluk in Coimbatore District. The length of the proposed checkdam is 30.00 m and height is 1.50 m | 120.00 |
| | **Total** | **320.00** |
| | **Grand Total (in Lakhs)** | **1120.00** |

இந்நிலையில், மேற்கண்ட நான்கு திட்டங்களுக்கும் அரசாணை(டி)எண்.13 தொழில் (எம்எம்டி.1) துறை நாள்.25.01.2019 மூலம் அரசிடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேலும், மேற்கண்ட திட்டங்களை செயல்படுத்தும்முன், விரிவான செயலாக்கத்திட்ட அறிக்கை (Details Project Report) யினை நிர்வாக குழு மற்றும் மேலாண்மை குழுவின் முன் சமர்ப்பித்து ஒப்புதல் பெறப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி சம்பத்தப்பட்ட துறையிடமிருந்து விரிவான செயலாக்கத்திட்ட அறிக்கை (Details Project Report) இக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு குழு உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்நேர்வில், மேற்கண்ட நான்கு திட்டங்களுக்கு நிர்வாக ஒப்புதல் வழங்க நிர்வாக குழு மற்றும் மேலாண்மை குழுவினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

மேற்காணும் பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையைப் பெற்று பணி முறைப்படி செயல்படுவதை கண்காணித்து கோயம்புத்தூர் மாவட்ட கனிம அறக்கட்டளைக்கு அறிக்கை அனுப்ப சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு (Implementing Agencies) அறிவுரை வழங்கப்பட்டது.

கோயம்புத்தூர் மாவட்ட கனிம அறக்கட்டளை தொகையை மேற்குறிப்பிட்ட ரூ.11,20,00,000/- (பதினோரு கோடியே இருபது இலட்சம் மட்டும்) மதிப்பிலான பணிகளுக்கான செலவினங்களுக்காகப் பெற்று வழங்கிட இணை இயக்குநர் / உதவி இயக்குநர் (பொ), புவியியல் மற்றும் சுரங்கத்துறை, கோயம்புத்தூர், அவர்களுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டும் மேற்படி பணிகளை செயல்படுத்தப்படுவதைக் உன்னிப்பாக கண்காணிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டது.

மேற்குறிப்பிட்ட பணிகளை செயல்படுத்துவது தொடர்பான மாதாந்திர நிலை அறிக்கையையும் (Monthly Status Report) புகைப்படம் மற்றும் உரிய பட்டியல்கள்/பணம் வழங்கிய வவுச்சர்கள் மற்றும் இரசீதுகளுடன் செலவின அறிக்கையை (Expenditure Statement) அனுப்பிட பணிகளை செயல்படுத்தும் நிறுவனத்திற்கு (Implementing Agencies) அறிவுறுத்தப்பட்டது.

6) செலவினங்கள்

கோயம்புத்தூர் மாவட்ட கனிம அறக்கட்டளையின் மூலம் 2018-2019 ஆண்டில் ஜனவரி மாதம் வரை கீழ் கண்ட செலவிற்க்காக காசோலைகள் வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண். | விவரம் | தொகை (ரூ.) | காசோலை எண் மற்றும் நாள். |
|---|---|---|---|
| 1 | முதல் நிர்வாக குழு மற்றும் மேலாண்மை குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட 2 திட்டங்களுக்கான தொகை | 9,90,000 | 466841/ 24.07.2018 |
| 2. | த/வா.ஜெய்குமார் அசோசியேட்ஸ் (Chartered Accountant) -2017-2018 ஆம் அண்டு மற்றும் 2018-2019 ம் முதல் அறையாண்டு கணக்குகளின் தணிக்கைக்காக | 23,600 | 466842/ 24.12.2018 |
| 3. | கணிணி தரவுப் பதிவர் மற்றும் கணக்கர் ஆகியோர்களுக்கு டிசம்பர் 2018 ம் மாதம் வரை மாத சம்பளம் | 56,910 | 466843/ 24.12.2018<br>466844/ 11.01.2019 |
| 4. | கணிணி - (ரூ.58,000 X 2 = ரூ.1,16,000) அச்சுப்பொறி - (ரூ.15,000 X 1 = ரூ.15,000) | 1,31,000 | 466845/ 24.01.2019 |
| | மொத்தம் | **12,01,510** | |

மேற்கண்ட செலவுகளை நிர்வாக குழு, மற்றும் மேலாண்மை குழு உறுப்பினர்கள் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர்.

| வ. எண் | நிர்வாக குழு/ மேலாண்மை குழு | கையொப்பம் |
|---|---|---|
| 1. | தலைவர், நிர்வாகக் குழு மற்றும் மேலாண்மைக் குழு, கோயம்புத்தூர் மாவட்ட கனிம அறக்கட்டளை மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் (பொ), கோயம்புத்தூர் | |
| | மாவட்ட வருவாய் அலுவலர், கோயம்புத்தூர் | |
| 2. | மாவட்ட வன அலுவலர், கோயம்புத்தூர் | |
| 3. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கோயம்புத்தூர். | |
| 4. | இணை இயக்குநர் / உதவி இயக்குநர் (பொ) (கனிமம்), கோயம்புத்தூர் - கூட்டுநர். | |
| 5. | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், ஊராட்சிகள் வளர்ச்சி, (PAPD), கோயம்புத்தூர் | |
| 6. | உதவி இயக்குநர் - ஊராக வளர்ச்சி துறை, கோயம்புத்தூர். | |
| 7. | மாவட்ட ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், கோயம்புத்தூர். | |
| 8. | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு | |
| 9. | மாவட்ட சுற்றுச்சூழல் செயற்பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், கோயம்புத்தூர் வடக்கு | |
| 10. | முதன்மை கல்வி அலுவலர், கோயம்புத்தூர். | |
| 11. | மண்டல செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை, திருச்சி. | |
| 12. | உதவி இயக்குநர், நில அளவை பதிவேடுகள் துறை, கோயம்புத்தூர். | |
| 13. | உதவி இயக்குநர், (ஊராட்சிகள்), கோயம்புத்தூர் | |
| 14. | மாவட்ட கருவூல அலுவலர், கோயம்புத்தூர். | |

| | | |
|---|---|---|
| 15. | மாவட்ட சமூக நல அலுவலர் கோயம்புத்தூர் | |
| 16. | துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், கோயம்புத்தூர். | |
| 17. | இணை இயக்குநர், வேளாண்மை | |
| 18. | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர், கோயம்புத்தூர். | 15/2/19 |
| 19. | திரு எஸ்.நரசிம்ஹன், ஓய்வு பெற்ற துணை ஆட்சியர், எண்.6, ருக்கம்மாள் காலனி, துடியலூர், கோயம்புத்தூர். | 15/2/2019. |

15/2/19